**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 61/2020**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | 1 முதல் 3 எதிரிகள் கைது இல்லை.<br>1 முதல் 3 எதிரிகள் மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.360/2017 ல் 31/01/2017 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 01/02/2017 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 19/07/2018 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 11/03/2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | 1. எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.82/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு 25/03/2026 ம் தேதி தள்ளுபடி. செய்யப்பட்டுள்ளது.<br>2. அரசுத் தரப்பில் கு.ப.ம.எண். 83/2026 ல் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு 25/03/2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டது. |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:24:55 +0530

| | | | |
|---|---|---|---|
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1- 23/03/2026 / இல்லை<br>அ.சா.2- 23/03/2026 / இல்லை<br>அ.சா.3- 23/03/2026 / இல்லை<br>அ.சா.4 25/03/2026 / 25/03/2026 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 25/03/2026 |
| 6 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:25:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி-14 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 61/2020**

**(CNR.No. TNTJ 270002092020)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.61/2020 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருநீலக்குடி காவல் நிலையம் குற்ற எண். 26/2017 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர் திருநீலக்குடி காவல் நிலைய |
| 4 | எதிரிகளின் விபரம் பெயர் வயது தந்தையின் பெயர் குடியிருப்பு | 1. சுரேந்தர், வயது 25/2017, த/பெ. ஆறுமுகம், 2. தமிழ்செல்வன், வயது 26/2017, த/பெ. நடராஜன், 3. அபி, வயது 26/2017, த/பெ. சிவக்கொழுந்து, 1 முதல் 3 எதிரிகள் வசிப்பது காளியம்மன் கோவில் தெரு, கீழமருத்துவக்குடி. |
| 5 | தேதி நாள் சம்பவம் | 16/01/2017 |
| 6 | முறையீடு | 19/01/2017 |
| 7 | கைது | 1 முதல் 3 எதிரிகள் கைது இல்லை. |
| 8 | பிணையில் விடுவித்தல் | 1 முதல் 3 எதிரிகள் 1 முதல் 3 எதிரிகள் மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.360/2017 ல் 31/01/2017 ம் தேதியிட்ட உத்தரவின் |

RANGESWARI Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:25:31 +0530

| | | |
|---|---|---|
| | | படி முன் பிணை பெற்று, 01/02/2017ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 9 | விசாரணை துவக்கம் | 23/03/2026 |
| 10 | விசாரணை முடிவு | 25/03/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் பிரிவுகள் 294(பி), 324(2 **எண்ணிக்கை**), 506(ii) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 17/08/2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25/03/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு**.M.P.**மனோகரன்**,M.A.,B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

இவ்வழக்கில் பட்டியல் சாட்சி-1 தமிழ்செல்வன் என்பவர் கீழமருத்துவக்குடி,

RANGESWARI Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:25:40 +0530

காளியம்மன் கோவில் தெருவில் 16/01/2017 ம் தேதி இரவு கோவில் திருவிழாவில் ரகு மற்றும் சுரேந்தர் ஆகியோருக்கு காளியம்மன் கோவில் வாசலில் நடந்த வாய்ச்ண்டையை சமாதானப்படுத்தி விட்டு வீட்டுக்கு வந்துவிட்டதாகவும், கடந்த 16/01/2017 ம் தேதி இரவு 07.30 மணியளவில் கீழமருத்துவக்குடி, காளியம்மன் கோவில் தெருவில் உள்ள பட்டியல் சாட்சி-1 தமிழ்செல்வன் என்பவர் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் பட்டியல் சாட்சி-1 ஐ "குச்சிகாரி மகனே, தேவடியா மவனே" என்று அசிங்கமாக திட்டியும், கையில் வைத்திருந்த கட்டையாலும், இரும்பு கம்பியாலும் இடது பக்க நெற்றி, தலை ஆகிய இடங்களில் அடித்தும், அதை தடுக்க வந்த பட்யடில் சாட்சி-2 மல்லிகாவை உடம்பில் அடித்தும், இரும்பு கம்பியை காட்டி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் திருநீலக்குடி காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 230-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324(2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:25:48 +0530

வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தான் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.82/2026 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)-ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 தமிழ்செல்வன் கடந்த 17/01/2017 ம் தேதியன்று திருநீலக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-8 சிவபிரகாசம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அன்றைய தினமே மாலை 04.10 மணிக்கு நிலைய மனு எண்.28/2017 பதிவு செய்து, மேற்படி மனுவை விசாரித்து 19/01/2017 ம் தேதி காலை 10.30 மணிக்கு நிலைய குற்ற எண்.26/2017-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் உதவி ஆய்வாளர் சிவபிரகாசம்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:25:58 +0530

வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு 19/01/2017 ம் தேதி காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி-5 குருநாதன் மற்றும் பட்டியல் சாட்சி-6 அன்பு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் காயமுற்ற சாட்சியாக அ.சா.2 மல்லிகா விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 சின்னசாமி விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது, இந்த வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், பட்டியல் சாட்சி-7 மருத்துவர் பிரபாகரன் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியுள்ளார். அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியங்களின் வாக்குமூலங்களிலிருந்தும் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையிலிருந்தும 4 ம் எதிரி பிரசாத் என்பவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் இந்த வழக்கின் 4 ம் எதிரி பிரசாத்தை இவ்வழக்கிலிருந்து நீக்கி தனி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 27/03/2017 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார்.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:26:07 +0530

8. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

10. **விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

11. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:-

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

12. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:26:37 +0530

13. அரசு தரப்பில் இவ்வழக்கில் கடந்த 16/01/2017 ம் தேதி இரவு 07.30 மணியளவில் கீழமருத்துவக்குடி, காளியம்மன் கோவில் தெருவில் உள்ள அ.சா.1 தமிழ்செல்வன் என்பவர் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டியதாகவும், கையில் வைத்திருந்த கட்டையாலும், இரும்பு கம்பியாலும் இடது பக்க நெற்றி, தலை ஆகிய இடங்களில் அடித்ததாகவும், அதை தடுக்க வந்த அ.சா.2 மல்லிகாவை உடம்பில் அடித்தும் இரும்பு கம்பியை காட்டி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 தமிழ்செல்வன் கடந்த 17/01/2017 ம் தேதியன்று திருநீலக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-8 சிவபிரகாசம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அன்றைய தினமே மாலை 04.10 மணிக்கு நிலைய மனு எண்.28/2017 பதிவு செய்து மேற்படி மனுவை விசாரித்து 19/01/2017 ம் தேதி காலை 10.30 மணிக்கு நிலைய குற்ற எண்.26/2017-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்துள்ள தமிழ்செல்வன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த தேதி மாதம் நினைவில்லை என்றும், சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு 07.00 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது கூட்டமாக சில நபர்கள் வந்து அசிங்கமான வார்த்தையால் திட்டி எதிரிகள் கையில் வைத்திருந்த கட்டையால் தன் தலையில் அடித்து காயத்தை எற்படுத்தினார்கள்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:26:49 +0530

என்றும், இரவு நேரம் என்பதால் யார் என்னை அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விவரம் தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தில் காயமுற்ற சாட்சியாக அ.சா.2 மல்லிகா விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது தம்பி என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 க்கு ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக தனக்கு ஏதும் தெரியாது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தனது தம்பி வாசலில் உட்கார்ந்திருந்தார் என்றும் யாரோ இருவர் தனது தம்பியை அடித்தார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் தான் தனது தம்பியை அடித்தார்களா என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:26:57 +0530

17. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 சின்னசாமி விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது மகன் என்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக தனக்கு ஏதுவும் தெரியாது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தனது மகன் வாசலில் உட்கார்ந்திருந்தார் என்றும், யாரோ இருவர் தனது மகனை அடித்தார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் தான் தனது மகனை அடித்தார்களா என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161 ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

18. அ.சா.4 கோவிந்தராஜன், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருநீலக்குடி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் சிவப்பிரகாசம் என்பவருடன் சேர்ந்து பணிபுரிந்து வந்த காலத்தில் அவருடைய கையெழுத்து, கையொப்பம், எழுத்து, நடை நன்கு பரிட்சயம் என்பதாலும் வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காகவும் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 17.01.2017 ம் தேதி மாலை திருநீலக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவப்பிரகாசம் நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அங்கு

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:27:05 +0530

சிகிச்சையில் இருந்த அ.சா.1 தமிழ்செல்வன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அன்றைய தினம் மாலை 04.10 மணிக்கு நிலைய மனு எண் 28/2017 பதிவு செய்து மேற்படி மனுவை விசாரித்து 19.01.2017 காலை 10.30 மணிக்கு குற்ற எண்.26/2017 சட்டபிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதச பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு உதவி ஆய்வாளர் சிவப்பிரகாசம் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு 19.01.2017 ம் தேதி காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குருநாதன் மற்றும் அன்பு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்பு பார்வை மகசர் சாட்சிகள் குருநாதன் மற்றும் அன்பு ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு சம்பவ சாட்சிகள் தமிழ்செல்வன், மல்லிகா, சின்னசாமி, ஸ்டாலின் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும், விளக்கமாகவும் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள் என்றும், மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் தஞ்சை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த வழக்கின் காயம்பட்ட அ.சா.1 தமிழ்செல்வன், அ.சா.2 மல்லிகா ஆகியோருக்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரபாகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார் என்றும், மேற்படி மருத்துவர் காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழக்கியுள்ளார் என்றும்,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:27:11 +0530

மேற்படி சாட்சியங்களின் வாக்குமூலங்களிலிருந்தும் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையிலிருந்தும் 4ம் எதிரி பிரசாத் என்பவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் இந்த வழக்கின் 4ம் எதிரி பிரசாத்தை இவ்வழக்கிலிருந்து நீக்கி தனி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 27.03.2017 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் படி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 புகார்தாரர் தமிழ்செல்வன் என்பவர் விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டடு, அது இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே அ.சா.1-ன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:27:19 +0530

**20. முடிவாக, இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 294(பி), 324(2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

21. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 28/03/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:27:28 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. தமிழ்செல்வன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. மல்லிகா (காயமுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. சின்னசாமி (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. கோவிந்தராஜ் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19/01/2017 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | 19/01/2017 | புகார் வாக்குமூலம் |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:27:34 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 19/01/2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 19/01/2017 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 19/01/2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 16/01/2017 | காயச்சான்று (அ.சா.1 தமிழ்செல்வன்) |
| அ.சா.ஆ.7 | 16/01/2017 | காயச்சான்று (அ.சா.2 மல்லிகா) |
| அ.சா.ஆ.8 | 27/03/2017 | தனி அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**; இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**; இல்லை

**குறிப்பு:**

1. 1 முதல் 3 எதிரிகள் கைது இல்லை.1 முதல் 3 எதிரிகள் 1 முதல் 3 எதிரிகள் மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.360/2017 ல் 31/01/2017 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 01/02/2017 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர்.
2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை
5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:27:42 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)